www.Padasalai.Net www.CBSEtips.in
www.vskteaches.xyz YouTube - @vskteaches

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண்:

## பொதுத் தமிழ்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக: 14×1=14

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கண நூல்
   அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம்
   இ) தண்டியலங்காரம் ஈ) யாப்பருங்கலக்காரிகை
2. வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு?
   அ) செய்யாமல் செய்த உதவி ஆ) செய்ந்நன்றி
   இ) தினைத்துணை நன்றி ஈ) பயன்தூக்கார் செய்த உதவி
3. பொருத்துக:
   அ) தமிழ் அழகியல் - பரலி சு. நெல்லையப்பர்
   ஆ) நிலவுப்பூ - தி.சு. நடராசன்
   இ) கிடை - சிற்பி பாலசுப்பிரமணியம்
   ஈ) உய்யும் வழி - கி. ராஜநாராயணன்
   அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1
4. கண்டான் - என்னும் சொல்லைப் பிரிக்கும் முறை
   அ) காண் + ட் + ஆன் ஆ) காண் (கண்) + ட் + ஆன்
   இ) காண் + ட் + ட் + ஆன் ஈ) காண்டு + ஆன்
5. தமிழ்க்குயிலே! கூவி வா, வா! எனக் கூறியவர்
   அ) சுரதா ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) சிற்பி. பாலசுப்பிரமணியம்
6. மதராசப்பட்டினம் என்று அழைக்கப்பட்ட பகுதிகள்
   அ) வட சென்னைப் பகுதிகள் ஆ) தென்பெண்ணைப் பகுதிகள்
   இ) மத்திய சென்னைப் பகுதிகள் ஈ) இவை மூன்றும்
7. 'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
   அ) எருது ஆ) நாய் இ) குதிரை ஈ) யாழி
8. 'குருவி மறந்த வீடு' என்று சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர் யார்?
   அ) உத்தமசோழன் ஆ) பக்தவத்சல பாரதி இ) சி.மணி ஈ) இளசைமணி
9. Debit Card என்பதன் சரியான தமிழ்ச்சொல்
   அ) பற்று அட்டை ஆ) குடும்ப அட்டை இ) கடன் அட்டை ஈ) திறன் அட்டை
10. 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' - இத்தொடர் உணர்த்தும் பண்பு
    அ) முரண்பண்பு ஆ) நேர்மறைப் பண்பு இ) முரண்பண்பு ஈ) இவை அனைத்தும்
11. 'துன்பு உளது எனின் அன்றோ' - 'உளது' இலக்கணக்குறிப்பு
    அ) வினையெச்சம் ஆ) பெயரெச்சம் இ) மரூஉ ஈ) இடைக்குறை
12. 'சீதாள பத்திரம்' என்பது -
    அ) தாழை மடல் ஆ) பனையோலை இ) நெல்தாள் ஈ) கம்பந்தட்டை

Question and answer for other district's all subject avillable in our chennal.
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
www.vskteaches.xyz YouTube - @vskteaches



13. தமிழில் திணைப்பாகுபாடு எதன் அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது?
அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

14. மோட்டார் வாகனச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு எது?
அ) 2015 ஆ) 2017 இ) 2016 ஈ) 2018

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** 3×2=6

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்துபாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16. 'முயல்வாருள் எல்லாம் தலை' என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?
17. வசனம், கவிதை வேறுபாடு தருக.
18. கலிவிழா, ஒலிவிழா - விளக்கம் தருக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** 2×2=4

19. பசுமைக்குழல் வாயுக்கள் என எவற்றை அழைக்கிறோம்?
20. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
21. சங்க காலத்தில் தாய்வழிச் சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக:** 7×2=14

22. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:*
கலை, களை, கழை
23. *கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க:*
அ) முன் < ஆ) தானே <
24. *மூன்றாவது சீர் அமைத்து எழுதுக:*
அ) உண்ணாது நோற்பார் ............. ஆ) கல்லாரே ஆயினும் ...............
25. *உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக :*
அ) கிணற்றுத் தவளை போல ஆ) நகமும் சதையும் போல
26. *வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:*
அ) மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்பு கொள்ள வேண்டும்
ஆ) நம் வாழ்க்கையின் தரம் நமதுக் கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது.
27. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:*
அ) எத்திசை ஆ) செல்லிடத்து
28. *ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:*
அ) வியந்து ஆ) தந்தனன்
29. உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்று வருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.

Question and answer for other district's all subject avillable in our chennal.
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
www.vskteaches.xyz
www.CBSEtips.in
YouTube - @vskteaches



30. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடராக்குக:

அ) சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.

ஆ) அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும்?

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: 2×4=8

31. 'எவற்றெயெல்லாம் விட நன்றி உயர்ந்தது' - குறள் வழி விளக்குக.

32. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

33. சடாயுவைத் தந்தையாக ஏற்று இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

34. கூதிர்ப்பாசறைத் துறையைச் சான்றுடன் விளக்குக.

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: 2×4=8

35. சங்கப்பாடல்களில் ஒலிக்கோளம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

36. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றையக் கூட்டுக்குடும்பம் - விளக்குக.

37. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்னும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

38. "மையாடல்" பற்றி நீவிர் அறிந்தவற்றை எழுதுக.

### பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: 3×4=12

39. பொருள் வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

40. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக:

அ) சிறுதுளி பெருவெள்ளம் (அல்லது) தனிமரம் தோப்பாகாது

41. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தை எழுதி, ஏற்புடை நயங்கள் மூன்றினை எடுத்தெழுதுக:

சாதிச் சண்டையெல்லாம் - ஓய்ந்து
    தணிய வேண்டுமப்பா!
நீதி நாடெங்கும் நிலைத்து
    நிற்க வேண்டுமப்பா!
உலக மக்களெல்லாம் - அன்போ
    டொருதாய் மக்களைப்போல்
கலகமின்றி வாழும் காலம்
    காண வேண்டுமப்பா!

- கவிமணி

Question and answer for other district's all subject avillable in our chennal.
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
www.vskteaches.xyz
www.CBSEtips.in
YouTube - @vskteaches



42. தமிழாக்கம் தருக:

1. Knowledge of language is the doorway to wisdom.
2. The limits of my language are the limits of my world.
3. Learn young.
4. Love Cools, friendship falls off.

43. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்கு கவிதை புனைக.

அ) மழை ஆ) நட்பு

## பிரிவு - 4

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** 3×6=18

44. அ) கவிதை எழுத அறிய வேண்டுவனாவாக சுரதா கூறுவனவற்றை விவரிக்க.

(அல்லது)

ஆ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவுநிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

ஆ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நடத்திய கலந்துரையாடல் கருத்துகளை விவரிக்க.

46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீவிர் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

(அல்லது)

ஆ) "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

## பகுதி - IV

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக: 4+2=6

அ) "குகனொடும்" எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்

ஆ) 'மிகும்' என முடியும் குறள்.

----------

Question and answer for other district's all subject avillable in our chennal.
Kindly send me your study materials to padasalai.net@gmail.com



www.Padasalai.Net